கிறோம். ரூ. 40,000 என்றால் ரூ. 1,60,000 கூட கட்டக்கூடிய நிலைமை சட்டத்தில் இருக்கிறது. ஹைகோர்ட் தடை செய்திருப்பதால் அமல் நடத்தவில்லை. வழக்கு முடிந்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும்.

திரு. கே. எ. வகாப் : மோசடிகள் நடப்பது அரசுக்கு குறைவாகத் தெரிந்திருந்தாலும் இப்போது கிராமங்களில் ரெஜிஸ்தர் செய்யப்படாத சீட்டுக் கம்பெனிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்க போலீஸுக்கு உத்தரவு போட்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ரெஜிஸ்தர் செய்த வழக்குகள் 599. ரெஜிஸ்தர் செய்யாதவை 257.

கோவை நகராட்சிக்கு நிதி வழங்கல்

*121 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகர அபிவிருத்திக்கு நகர் அபிவிருத்தி நிதியின் கீழ் உதவி புரியுமாறு கோவை நகராட்சி மன்றம் மாநில அரசுக்கு வேண்டுகோள் ஏதேனும் அண்மையில் விடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) கோவை நகர் மன்றம் தனது 30—4—1975-ம் தேதிய 251-ம் எண் தீர்மானத்தில் நகர் அபிவிருத்தி நிதியிலிருந்து கோவை நகரமைப்புத் திட்டத்திற்காக ரூபாய் 2.00 கோடி ஒதுக்கும்படி கேட்டிருக்கிறது.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: கோவை நகர அபிவிருத்திக்காக அங்கிருந்து கோரப்பட்ட தொகை இரண்டு கோடி என்று குறிப்பிட்டார்கள். அந்த இரண்டு கோடி ரூபாய் எந்தெந்த இனங்களுக்காக முக்கியமாக செலவழிக்கக் கோரப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அது மிகப் பெரிய நீண்ட பட்டியல். ஆகவே உறுப்பினர் அவர்களுக்கு தேவைப்பட்டால் அதை அவை முன்னர் வைக்கத் தயாராயிருக்கிறேன்.